விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 205 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 27 வியாழக்கிழமை (11.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

அமெரிக்க காங்கிரஸால் சமர்ப்பிக்கப்பட்ட
## தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை குறித்த தீர்மானம்
### 50க்கு மேற்பட்ட அமைப்புகள் வரவேற்பு

(கொழும்பு)
ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்காக சுதந்திரம் குறித்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் எனக் கோரும் அமெரிக்க காங்கிரஸ் தீர்மானத்திற்கு 50க்கும் மேற்பட்ட புலம்பெயர் அமைப்புகள் தங்கள் ஆதரவை வெளியிட்டுள்ளன.
2024 மே 15ஆம் திகதி அமெரிக்க 15

அதிபர், ஆசிரியர் பிரச்சினையை
## ஓரிரு தினங்களில் சரி செய்ய முடியாது - சுசில்

(கொழும்பு)
அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு நீண்டகாலப் பிரச்சினை. அதனை ஓரிரு தினங்களில் சரி செய்ய முடியாது. அனைத்து தரப்பினரும் ஓரிடத்தில் அமர்ந்து, அனைத்து துறையினருக்கும் ஒரே தடவையில் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லாமல், இந்த பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது என கல்வி 02

# வேலை நிறுத்தங்களால் மீண்டும் அரகலய ஆரம்பம்

### பாராளுமன்ற எரிப்புடனே நிறைவடையும் அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை



(கொழும்பு)
நாட்டில் நிலவும் வேலை நிறுத்தங்கள் தேசத்தை சீர்குலைக்கும் மீண்டுமொரு அரகலயவின் ஆரம்பமாக இருக்கலாம், இப்போராட்டம் பாராளுமன்ற எரிப்புடனே நிறைவடையும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரித்துள்ளார்.
(02ஆம் பக்கம் பார்க்க)

சதொசவில்
## அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)
லங்கா சதொச நிறுவனமானது அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைக்கநடவடிக்கை எடுத்துள்ளது. 15

புலோலியில்
## வழுக்கி விழுந்தவர் உயிரிழப்பு

(கரணவாய்)
மலசலகூடத்துக்கு சென்றவர் வழுக்கி விழுந்ததில் உயிரிழந்துள்ளார். 15

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து இன்று ஒத்திவைப்பு விவாதம்


(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலை உரிய காலப்பகுதியில் நடத்துவதன் தேவை தொடர்பில் பாராளுமன்றவிவாதமொன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
அதற்கமைய 15

## சுகவீன விடுமுறை எடுக்காத ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு
### அமைச்சரவையும் அனுமதி

(கொழும்பு)
சுகவீன விடுப்புப் பிரசாரத்தில் ஈடுபடாத ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகப் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். 15


புலமைச் சிகரம்
அமரர் வே. அன்பழகன்
ஞாபகார்த்தமான
தரம் 05
zoom
முற்றிலும் இலவசமான
மாதிரி வினாத்தாள்கள் வெளியீடும்
மாபெரும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கும்
2024
"உயர்ந்த புள்ளிகளைப் பெறுவதற்கான விசேட செயலமர்வு"
ஆரம்பம் - 11.07.2024 (இன்று முதல்)
11 பல்கோண வினாத்தாள்களின் சங்கமம்
யாழ்ப்பாணம், கொழும்பு, திருமலை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களின் பிரபல ஆசிரியர்களின் பதினொரு (11) மாதிரி வினாத்தாள்கள் வெளியிடப்படவுள்ளன.
குறிப்பு : ஒவ்வொரு வாரமும் ஒரு பூரண மாதிரி வினாத்தாள் வெளியீடு செய்யப்பட்டு மறுநாள் zoom ஊடான கருத்தரங்கு இடம்பெறும். வினாத்தாள் வெளியீடும் சூம் கருத்தரங்கு விபரமும் எமது வட்சப் குழு மூலம் அறியலாம். மேலதிக விபரங்களை அறியவும் இவ் இலவச கருத்தரங்கில் பங்கு பற்றவும் 0767461066 என்ற வட்சப் இலக்கத்திற்கு உடன் அழையுங்கள்.
அனைத்து மாணவர்களும் பங்குபற்றி பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
ஏற்பாடு: www.ivinstamil.com ஐவின்ஸ் தமிழ் இணையத்தளம்
(1437)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி
## 7 மனித உடல் பாகங்கள் அடையாளம் காணப்பட்டன
### இராணுவத்தால் பாவிக்கப்பட்ட கம்பி, ஆடைகள் மீட்கப்பட்டன


15


## பொருட்களுக்கு தட்டுப்பாடு? விலைகள் அதிகரிக்கலாம்

(கொழும்பு)
எதிர்வரும் நாட்களில் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியங்கள் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.
அண்மையில் சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த பணியாளர்கள் சுகவீனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.
இதனால் துறை 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர ஆழ்வார் பிரதமகுரு
# இயற்கை எய்தினார்




சிறப்பு மிக்க வல்லிபுர குறிச்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பிரதம குரு கணபதிசாமிக்குருக்கள் சுதர்சனக்குருக்கள் அவர்கள் தனது 76 வது வயதில் இயற்கையெய்தினார்.

இவர் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பிரதம குருவாக யாழ்ப்பாணம் வடமராட்சியின் வரலாற்று இறை பணியாற்றியுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் வடமராட்சி துன்னாலை மத்தி கரவெட்டியை பிறப்பிடமாகவும், சிவன் கோவிலடி, ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்டவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் சொந்த இடமான சிவன் கோவிலடி, ஆவரங்காலில் நேற்று நடைபெற்றது. (ம-7)

# போதை ஒழிப்பு தொடர்பில் யாழில் பயிற்சிப் பட்டறை



(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் பயிற்சிப்பட்டறையொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடாத்தப்பட்டது.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான இந்த பயிற்சிப்பட்டறை யாழ். நல்லூர் பிரதேசசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் பொழுது ஊடகங்களுக்குரிய போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த பயிற்சி பட்டறையில் கொழும்பு போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஸ்ட நிகழ்ச்சி திட்ட அதிகாரி எச் ரஹீம் , யாழ்.மாவட்ட நிகழ்ச்சி திட்ட அதிகாரி ஏ.கோடீஸ் மற்றும் யாழ் மாவட்ட ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## ஓரிரு...

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-7)

## வேலை...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்,

இன்று நிலவும் வேலை நிறுத்தங்கள், பாராளுமன்ற வளாகத்தை எரிப்பதில் நிறைவடையும் நாட்டை ஸ்திரமின்மைக்கு உட்படுத்துவதற்கான ஒரு பயிற்சியின் ஆரம்பமாக இருக்கலாம்.

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோர் சம்பளத்தை உயர்த்துவதற்கான சாத்தியமற்ற கோரிக்கையை முன்வைக்கின்றனர்.

ரயில்வே ஊழியர்கள் மற்றும் பிறர் கோரும் சம்பள உயர்விற்கான நிதியை ஒதுக்குவதற்கு, பெறுமதி சேர் வரி மற்றும் பிற வரிகளை அரசாங்கம் அதிகரிக்க வேண்டும்.

சம்பள உயர்வை வழங்க முடியாது என்பது எதிர்க்கட்சிகளுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், பொய்யான வாக்குறுதிகளை அளிக்கின்றனர். தயவு செய்து இதுபோன்ற செயல்களில் ஈடுபடாதீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். ரயில்வே ஊழியர்கள் வேலைக்குத் திரும்பத் தவறினால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்பதை நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

அவர்கள் பயங்கரவாதத்தை ஏற்று இந்த நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விட்டுள்ளனர் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம-7)

## பொருட்க...

முகங்களில் தேங்கிக்கிடந்த பொருட்களை மேற்பார்வை செய்து விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

அதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மண்டைதீவு முகப்பு வயல் முருகனுக்கு கும்பாபிசேகம்

(மண்டைதீவு)


மண்டைதீவு முகப்பு வயல் முருகன் ஆலய மகா கும்பாபிசேகம் நாளை வெள்ளிக்கிழமை 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாளை காலை 06 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி காலை 09.40 மணிக்கு முருகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிசேகம் இடம்பெறும்.

இதேவேளை இன்று வியாழக் கிழமை அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவர்.

கும்பாபிசேகத்தை பிரதம குரு சிவஸ்ரீ தியாக அசோக்வரக்குருக்கள் நடத்தி வைப்பார். (ந)


உ
சிவமயம்



**ஆனந்த நடராஜரது ஆனித் திருமஞ்ஜனம்**

**பெருமானின் வடிவமே அஞ்செழுத்து 'ஓம் நமசிவாய'**

**நாளை உலகெங்குமுள்ள சிவன் கோயில்களில் அதிகாலை ஈசனின் திருநடனக் காட்சியைக் கண்டு தரிசிப்பதே பிறவியின் பயன்**

**குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும், இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே!**

உயிர்க்கு இனிமை சேர்க்கும் தூக்கிய திருவடி, எல்லா சிவன் கோயில்களிலும் அதிகாலையில் ஈசனின் திருநடனக் காட்சியும் அதி, மிகு, அருள் ஆனித் திருமஞ்ஜனமும் காண்பதே பிறவியின் பயன் ஆகும்

தரிசனம்! "ஓம் நமசிவாய" எனும் நாம உச்சாடனம் ஓதி, சிவபுராணம், திருமுறை, திருவாசகம் ஓதி சிவசிந்தனையில் ஈடுபட்டு, உலக விவகாரங்களில் மயங்காமல், மெய்ப்பொருளான இறைவனை எண்ணித் தியானிக்க, இறைவன் உள்ளே குடி புகுந்தருளுவான் "ஓம் நமசிவாய"

**முத்தி நெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்**
**பத்தி நெறி அறிவித்து பழவினைகள் பாற**
**முத்தி தருவான் ஓம் நமசிவாய**



**க.கு.க.சிவபாலன்**
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்
மாணிக்கவாசகர் மடாலய போசகர்

(C-0772)



**வேலையாட்கள் தேவை**

உணவகமொன்றிற்கு
ரொட்டி தயாரிப்பாளரும்
உதவியாளரும்
தேவை.

(1443)

**077 629 0894**



1 ஆம் ஆண்டு **நினைவஞ்சலி**

அமரர்
**சுப்பையா புஸ்பமணி**



கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் - அம்மம்மா
ஆண்டு ஒன்று ஆனாலும் உம்
நினைவுகள் அழியவில்லை - அம்மம்மா
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் எம்முடன்
இருப்பீர்கள் - அம்மம்மா

தோற்றம் 1942.04.19
மறைவு 2023.06.24

(C-773)

தகவல்:
பேரப்பிள்ளைகள்,
மருமகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு-கிழக்கில் உள்ள

# வேலையில்லா பட்டதாரிகள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?

## தெளிவுபடுத்துமாறு சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வேலையில்லா பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கம் என்ன நிலைப்பாட்டில் உள்ளது என்பதனை அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்தேன். அங்கே வடக்கு மாகாணத்திலும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வேலையில்லாப் பட்டதாரிகள் தங்களின் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

இந்த வேலையில்லாப் பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கத்தின் பதில் என்ன? அவர்கள் தொடர்பான வேலைத்திட்டம் என்ன? அரசாங்கத்தின் கொள்கை என்ன? அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுமா? அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏன் எங்களை நியமிக்க முடியவில்லை என்று கேட்கின்றனர். அவர்களின் கோரிக்கை அறிக்கையை சபையில் முன்வைக்கின்றேன்.

இதேவேளை நாட்டில் வேலையில்லா பட்டதாரிகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ளது. எமது இலவசக் கல்வியை பெற்று பின்னர் வேலையில்லா வரிசைக்குள்ளா அவர்கள் செல்லப் போகின்றனர்? இதனால் இவர்கள் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் தீர்வு தொடர்பில் பதிலளிக்க வேண்டும் என அவர் கேள்வி யெழுப்பினார். (நி-6)

## கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள துருக்கி கப்பல்



(கொழும்பு)

துருக்கிய கப்பல் ஒன்று உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றிற்காக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

துருக்கிய கடற்படையின் டி.சி.ஜி கினாலியாடா என்ற இந்த கப்பல் 152 மாலுமிகளைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலின் கட்டளை அதிகாரியாக டோகனுக்கும் மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சமன் பெரேராவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்றும் இங்கு இடம்பெற்றுள்ளது. (நி-6)

# வரி அதிகரிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிக்கும் நோக்கில் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேவர்தன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சம்பள அதிகரிப்பினை இலக்காகக் கொண்டு வற் வரி அதிகரிக்கப்பட்டால், தனியார் துறையினர் பாரியளவு தொழிற் சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையையும் மாணவர்களையும் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி நேர்மையுடன் செயற்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசாங்கத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தனியார் துறைகளிடமிருந்து வரி அறவீடு செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சம்பள அதிகரிப்பு கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்கப் போராட்டத்தின் பின்னணியில் அரசியல் மறைகரமொன்று செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கொவிட் காலத்தில் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்கள் இரண்டு ஆண்டுகளாக முழுச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டனர் எனவும், தனியார் துறையினருக்கு அவ்வாறு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை எனவும் கெமுனு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் போராட்டம் காரணமாக தனியார் பேருந்து உரிமையாளர்களின் வருமானம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## அஸ்வெசும நலன்புரித்திட்டம் விண்ணப்பிக்க மீண்டும் சந்தர்ப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் "அஸ்வெசும" நலன்புரி நன்மைகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட தகவல் கணக்கெடுப்பு பணிகள் ஜூலை 15 முதல் 30 வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

முதலாம் கட்டத்தில் தகுதி பெற்ற 18 இலட்சத்துக்கும் அதிகமானோரைத் தவிர இரண்டாம் கட்டத்திற்காக 450,924 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறப்பட்டுள்ளன.

அவற்றில் நலன்புரி நன்மைகள் பெறத் தகுதியானவர்களை இனங்காணும் பணிகள் இம் மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்திற்கு 1,854,000 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதற்காக 58.5 பில்லியன் ரூபாய் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள் அல்லது தவறியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க நலன்புரி நன்மைகள் சபை சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. (நி-6)

## பணிகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்ய புதிய விதிகள்

### அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

பாடசாலை கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் மருத்துவமனைகளில் நோயாளி பராமரிப்பு சேவைகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக புதிய விதிகளை அறிமுகப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பாடசாலை காலங்களில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்புச் சேவைகளை சீர்குலைக்கும் வகையிலும் சில குழுக்கள் மேற்கொள்ளும் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரவை கவனத்தில் எடுத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சட்டவிரோத செயல்கள் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் நோயாளர்களுக்கு ஏற்படும் அநீதிகளை தடுப்பதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு, 2025 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட யோசனையை தயாரிக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கோட்ட மட்ட தடகள போட்டி
### பாலிநகர் மகா வித்தியாலயம் ஆதிக்கம்




முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாந்தை கிழக்கு கோட்டமட்ட தடகள விளையாட்டு போட்டி கடந்த புதன் கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரை முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தி யாலய மைதானத்தில் நடை பெற்றது இப்போட்டியில் பாலிநகர் மகா வித்தியாலயம் 274 புள்ளிகளை பெற்று கோட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளது.

பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் 76 புள்ளிகளையும். வன்னி விளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 56 புள்ளிகளையும் பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந் தினராக கலந்து கொண்ட துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலதி முகுந்தன் வெற்றிக் கேட யங்களை வழங்கி வைத்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி-6-350)

## ஒலிம்பிக் குழாமில் இணைந்த கிளிநொச்சி மாணவன்



கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவனான கோ.சரித்திரன் இடம்பெறவுள்ள 2028,2032 ஒலிம்பிக் போட்டி குழாத்தில் இடம்பிடித்துள்ளார்.


கட்டம் 1 இலங்கை முழுவதிலிருந்தும் விளையாட்டில் திறமைமிக்க 202 மாணவர்களும் ,கட்டம் 2இல் 202 மாண வர்களில் தனிப்பட்ட ஆற்றல்களை பரிசோதித்து 141 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இருந்த னர்.

இந் நிலையில் மேற்குறித்த கட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுள் ஒருவராக சரித்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது சாதாரண விடயமல்ல அவரின் கடின முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி மட்டுமன்றி பாடசாலைக்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் வடக்கு மாகாணத்திற்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் கிடைத்த வெற்றி ஆகும் . இதற்கான ஆரம்ப நிகழ்வுகள் கொழும்பு தாஜ் சமுத்திராவில் கடந்த திங்கட்கிழமை அன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவனான இவர் 2025 கணிதப் பிரிவில் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (நி-6-350)

## இந்திய அணியின் பயிற்சியாளரான கம்பீர்




இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த ராகுல் டிராவிட் பதவிக்காலம் நடைபெற்று முடிவடைந்த ரி-20 உல கக் கிண்ணத் தொடருடன் முடிவுக்கு வந்தது.


இதனையடுத்து தலைமை பயிற் சியாளர் பதவிக்கு இரண்டு போட்டி யாளர்களான கம்பீர் மற்றும் டபிள்யூ. வி. ராமன் ஆகியோரை பிசிசிஐ நேர் காணல் செய்தது. எனினும், சமீபத்தில் நடைபெற்று முடிந்த 2024 ஐ.பி.எல். தொடரில் இருந்தே இந்திய அணியின் அடுத்த பயிற்சியாளராக கவுதம் கம்பீர் நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பீரை நியமனம் செய்யப் பட்டுள்ளதாக பிசிசிஐ செயலாளர் ஜெய்ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது எக்ஸ்பக்கத்தில் ஜெய் ஷா பதிவிட்டுள்ளார். அதில், “இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பிரை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தற்கால கிரிக் கெட் வேகமாக வளர்ச்சியடைந் துள் ளது. கவுதம் கம்பீர் வளர்ச்சியடைந்து வரும் கிரிக்கெட்டை அருகி லிருந்து பார்த்தவர்.

இந்த புதிய பயணத்தை தொடங் கும் அவருக்கு பிசிசிஐ முழு ஆதரவு அளிக்கிறது” என்று பதிவிட்டுள் ளார். (நி-6)

## முதுமையிலும் இளந்துடிப்புடன்
### சாதித்த முதியவர்



கொழும்பு சுக ததாச விளையாட்டு அரங்கில் கடந்த மாதம் இடம்பெற்ற சம்பியன் போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்த முதியவர்.

யாழினைச் சேர் ந்த 74 வயதுடைய த.வேளாயுதம்பிள்ளை என்ற முதியவர் 80 மீற்றர் தடகளப் போட் டியில் பங்குபற்றி முத லிடத்தையும் 3000 மீற்றர் ஓட்டப் போட் டியில் 3 ஆம் இடத் தையும் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக் கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தேசிய நூலகத்தில் பாரிய தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தீ விபத்தானது நேற்றுக் காலை 10 மணியளவில் நூலகத்தின் கேட்போர் கூடத்துக்கு அருகில் உள்ள அறையில் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் கட்டடத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்தநிலையில், கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு படையினர் வருகை தந்து தீயை உடனே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (நி-6)



மன்னார் நானாட்டான் தூய ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று புதன்கிழமை காலை 7 மணிக்கு அருட்தந்தை ரெஜினோல்ட் அடிகளார் தலைமையில் கூட்டு திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருநாள் திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் உள்ளடங்களாக ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசி பெற்றனர். (படம்-ஜோசப்நயன்)

# பணிப்புறக்கணிப்பால் 12 லட்சம் கடிதங்கள் தேக்கம்

## தபால் தொழிற்சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**தபால் ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக மத்திய தபால் பரிவர்த்தனை மற்றும் ஏனைய தபால் நிலையங்களில் கிட்டத்தட்ட 12 இலட்சம் கடிதங்கள் மற்றும் பொதிகள் தேங்கிக்கிடப்பதாக தபால் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.**

மத்திய தபால் பரிமாற்றத்தில் சுமார் 7 இலட்சம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால் பொதிகள் சிக்கியுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் இரு நாட்கள் தொடர்ந்து 48 மணிநேரம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற பதவிக்காலம் தொடர்பாக இலங்கை அரசியல் யாப்பில் நிலவும் தெளிவின்மையை நீக்கி திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி அரசியல் யாப்பில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற பதவிக் காலம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆறு ஆண்டுகளுக்கு மேல்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் என்ற சொற்றொடரை இணைக்க ஜனாதிபதி யோசனை முன் வைத்திருந்தார்.

இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு அண்மையில் உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வாகன இறக்குமதி; தீர்மானம் அடுத்த மாதம்

(கொழும்பு)

வாகன இறக்குமதித் தடையை நீக்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் 2024 ஓகஸ்ட் இரண்டாம் வாரத்தில் எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (445)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.


இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

கண்ணீர் அஞ்சலி



பதிவாளர் நாயகம் திணைக்கள வடக்கு வலய அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.உ.சங்கர்ஆனந் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்.

கதிரமலை உருத்திரமூர்த்தி

அவர்கள் 08.07.2024 திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(c-767)

# இராசிபலன்

11.07.2024
ஆனி 27, வியாழக்கிழமை,
பஞ்சமி முற்பகல் 10.03 மணிவரை
பூரம் பிற்பகல் 1.37 மணிவரை

சுபநேரம் -7.29-8.59 மணிவரை
இராகுகாலம் -1.29-2.59 மணிவரை
குமாரசஷ்டி விரதம், நடேசர் அபிஷேகம்

சந்திராஷ்டமம்.
பூராடம், உத்தராடம்.

வளவன்

**மேஷம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாடு திருப்தி தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**ரிஷபம்:** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்:** செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, புதிய பொருட் சேர்க்கையுண்டு, நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** தொழிலில் பணியாளர்களை மாற்றும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும நாள்.

**விருச்சிகம்:** வங்கிச் சேமிப்புக்கள் உயரும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், குழப்பங்கள் தீர்ந்து குதூகலம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்:** புதியபொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், சிலர் பாராட்டுவது போல் உங்களை விமர்சிக்கலாம்.

**கும்பம்:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**மீனம்:** உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், சுவாரஷ்யம் தரும் சம்பவங்கள இல்லத்தில் இடம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு.

நண்பர்கள் மனிதனின் குணத்தைக் காட்டும் கண்ணாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் சிவன் கோவில் ஆனித் திருமஞ்ஜனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோவில் ஆனித் திருமஞ்ஜன உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அதிகாலை 2 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 5 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சூரிய உதயத்தின் முன்னரான ஆனி உத்தர தரிசனம் இடம்பெறும். (நி-6)

## கொக்குவில் சாயி துர்க்கா கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலய மஹோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 20ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்க வைபவமும் இடம்பெறவுள்ளது என ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

# சவால்களுக்கு மத்தியில் இயங்கும் சுகாதாரத்துறை

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வைத்திய நிபுணர்களின் வெளியேற்றத்தால் வடமாகாண சுகாதாரத்துறை பாரிய சவாலுக்கு மத்தியில் இயங்கி வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**




நேற்று முன்தினம் பருத்தித்துறை தொண்டைமானாறு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட சித்த மத்திய மருந்தகம் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்ததாவது,

வைத்திய நிபுணர்களின் வெளியேற்றத்தால் வடக்கு மாகாண சுகாதாரத்துறை பாரிய சவாலுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றது. தாதியர் பயிற்சிகளுக்கு எமது பகுதிகளில் இருந்து ஒருவரும் செல்வதில்லை.

இந்நிலையில் வைத்தியசாலைகளில் வெளிமாகாணங்களை சேர்ந்தவர்களே அதிகளவில் பணியாற்றுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் 138 வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதார அமைச்சிடம் ஆளணி இல்லை. இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியிலேயே எமது சுகாதாரத்துறை இயங்குகின்றது. ஏதேனும் சேவைகள் உரிய முறையில் கிடைக்காவிடின் அது தொடர்பில் எங்களுக்கு தெரியப்படுத்தி அவற்றிற்கான உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என தெரிவித்தார். (நி-6)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கி வழங்கி வைப்பு




(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நலன் கருதி நேற்று புதன் கிழமை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடைய ஏற்பாட்டில் தற்காலிக மின்பிறப்பாக்கி ஒன்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் கருத்துத் தெரிவிக்கையில்,

வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட அவசர சிகிட்சைப் பிரிவு மற்றும் மகப்பேற்றுப் பிரிவுகளுக்கு மின்பிறப்பாக்கி இல்லாத நிலையில் தற்காலிக ஏற்பாடாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் மின்பிறப்பாக்கி ஒன்று தரப்பட்டுள்ளது. இதன்மூலம் மின்தடைப்படும் வேளையில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க கூடியதாக இருக்கும்.

கொழும்பில் இருந்து மேலும் சில வாரங்களில் நிரந்தர மின்பிறப்பாக்கி வருகைதரவுள்ளது என தெரிவித்தார். (நி-6-30)

## ஆளணி பற்றாக்குறையால் மூடப்பட்ட வைத்தியசாலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் சுமார் 5320 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த மே மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் வைத்திய நிலையமானது தொடர்ந்து மூடப்பட்டநிலையில் காணப்படுவதாக பொது அமைப்புக் கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட வைத்தியசாலை கட்டடத் தொகுதியானது போதிய ஆளணி வளம் இன்மையால் தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் காணப் படுகின்றது.

குறித்த வைத்திய சிகிச்சைப்பிரிவு இவ்வாறு நீண்ட காலம் மூடப்படுமாக இருந்தால் ஏனைய வைத்தியசாலைகளில் இடம்பெறுவது போன்று இந்த வைத்திய சிகிச்சைப்பிரிவில் இருக்கின்ற வைத்திய உபகரணங்களை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் கூட இடம்பெற நேரிடும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது

ஆகவே குறித்த வைத்திய சிகிச்சைப்பிரிவை இயங்க வைப்பதற்கு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்என பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-315)



**உடுவில் கற்பகப் பிள்ளையார் கோவில் மணிக் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு கலாநிதி. ஆறு. திருமுருகனால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.**


## கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கலை மற்றும் கைவினை, கலை மற்றும் வடிவமைப்பு, மோட்டார் வாகனத் தொழில்நுட்பக் கல்வி, அலுமினியக் கட்டுமானக் கல்வி, உலோகக் கட்டுமானக் கல்வி, மின்மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி, கிரபிக் வடிவமைப்பு/கணனி மூல வடிவமைப்பு, கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி, சுகாதாரமும் சமூகப்பாதுகாப்பு மற்றும் ஜவுளி மற்றும் ஆடைகள் கல்வி போன்ற குறித்த கற்கை நெறியினை க.பொ.த சா/த பரீட்சைப் அமர்வினை அடிப்படையாகக் கொண்டு (பெறுபேறு அவசியமில்லை) தொடர முடியும். அத்துடன் இந் நிகழ்ச்சி திட்டத்தினை முறையாகத் தொடர்ந்து பயில்வதன் ஊடாக துறைசார் பட்டதாரி/ டிப்ளோமாதாரர் ஆக முடியும்.

0212212540 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (நி-6)



**கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று பக்தி பூர்வமாக இடம் பெற்றது.**

**(படம்- தேவானந்தன், [illegible])**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள் அடையாளங்கள் இல்லாமல்
# 20 லட்சம் சிம் அட்டைகள்
## சபையில் அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**நாட்டில் சில குற்றச் சம்பவங்களைக் கண்டறிவதில் முக்கியமான பிரச்சினையாக முறையான அடையாளங்கள் இன்றிய சிம் அட்டைகளின் பாவனை காணப்படுவதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இவற்றுள் சுமார் இரண்டு மில்லியன் சிம் அட்டைகள் முறையான அடையா ளங்கள் இன்றி பாவனையில் இருப் பதாக அவர் கூறியுள்ளார். 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிம் அட்டைகளை பெற்றுக்கொள்ளும் போது அடையாள அட்டைகள் கோரப்பட வில்லை.

எனினும் புதிய சட்டத்தின்படி சிம் அட்டையை பெற்றுக் கொள்வதற்கு அடையாள அட்டையை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் என கனக ஹேரத் பாராளுமன்றில் நேற்று முன்தினம் தெரி வித்துள்ளார்.

இந்த நிலையில் 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் முறையான அடையாளங்கள் இன்றி பெறப்பட்ட சுமார் இரண்டு மில்லியன் சிம் அட்டைகள் தற்போது பாவ உள்ளதாகவும், இது சில குற்றச் சம்பவங்களைக் கண்டுபிடிப்பதில் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித் தார். (நி-6)

# இயற்கை எரிவாயு விலை மீண்டும் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச சந்தையில் நேற்று இயற்கை எரிவாயுவின் விலை 2.37 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இதேவேளை சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை சற்று அதிக ரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.66 அமெ ரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண் ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.44 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-6)


# NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31.05.2023 இற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு கீழ்குறிப்பிடப்படும் திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 27.07.2024 தொடக்கம் 04.08.2024 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவுத் திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 25.07.2024 | 27.07.2024 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 02 | முல்லைத்தீவு, மல்லாவி | 25.07.2024 | 27.07.2024 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 03 | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் | 25.07.2024 | 28.07.2024 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 04 | வவுனியா | 25.07.2024 | 28.07.2024 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 05 | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை | 01.08.2024 | 03.08.2024 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 06 | மன்னார், வங்காலை | 01.08.2024 | 03.08.2024 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 07 | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் II ஆம் கிளை, ஊர்காவற்றுறை திருநெல்வேலி, கோப்பாய் | 01.08.2024 | 04.08.2024 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்தி வைக்கும் அல்லது இரத்து செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**வட பிராந்திய முகாமையாளர்,**
**தேசிய சேமிப்பு வங்கி.**

(சி-770)





சிவமயம்

திருமதி.
## லலிதா சிவபாலன்
அவர்களுக்கு வழங்கப்பட்ட
## "இசைவேள்"
விருது



திருமதி.லலிதா சிவபாலன் அவர்கள் சரஸ்வதி தெய்வத்திடமிருந்து இரு வரங்களைப் பெற்ற புண்ணியவதி. ஒன்று பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டத் தெய்வீகப் பாடல்களைப் புனையும் புலமை. மற்றது உருகாதவர்களையும் நெக்க நெக்க உருக வைக்கும் இசைஞானம்.

இராமநாதன் நுண்கலைப்பீட இசைப்பட்டதாரியான இவர் திருமணத்தின் பின்னர் தற்காத்து, தற்கொண்டாற் பேணி, தகைசான்ற சொற்காத்து, சோர்விலாளாய் குடும்பக் கடமைகளை முழுமையாக நிறைவு செய்தவர். இக்காலத்தில் இவரது இசைஞானம் மௌனித்தது. இவரது கணவர் க.சிவபாலன் (பொறியியலாளர்) அவர்களைக் கண்ணை இமை காத்தது போன்று காத்தார்.

புதல்வர்களான சர்வேஸ்வரன், தபேசன், சாரங்கன், சிவராம் ஆகியோரைக் கல்வியில் உயர்த்தி சான்றோர்களாக்கினார்.

தற்பொழுது இவரது தேன் இசை கேட்போர் காதுகளில் எல்லாம் பாய்ந்து பரவசப்படுத்தி மெய்மறக்கச் செய்கிறது. கோண்டாவில் நாகபூசணி அம்மன், நல்லூர் கந்தசுவாமி கோவில், கோண்டாவில் ஆசிமடப் பிள்ளையார், ஏழாலை மாவடி வைரவர் (சௌந்தராஜன் செல்வகுமாருடன் இணைந்து பாடியது) சிட்னி முருகன், அவுஸ்ரேலியா செல்வவிநாயகர் ஆலயம், கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் ஆலயங்களின் மீது 150 பாடல்களளவில் தானே இயற்றி இசையமைத்துப் பாடியுள்ளதுடன் இறுவட்டு வெளியிட்டமையே சான்று.

19.05.2024 அன்று நடைபெற்ற பழனியாண்டவர் ஆலய மகோற்சவ நாளை முன்னிட்டு பிரதேச மக்கள் சார்பில்

"இசைவேள்"

பட்டம் அளித்துக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றேன்.

மனமுவந்து வாழ்த்தி வழங்குபவர்,

**திரு.T.V.கிருஸ்ணசாமி**
ஓய்வுநிலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

(சி-769)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 19 1/2<br>2 இல் செவ்<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்:English Teacher<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார்உத்தியோகம்<br>தொ.இ: B/14647 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 58 ¼<br>2 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: MBBS, Consultant<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Banker<br>தொ.இ: G/14678 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>12 இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, BBM (Following), Banker<br>எதிர்பார்ப்பு: வேலை செய்யும் பெண்<br>தொ.இ: B/14650 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>4 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Management, ChartedAccountant(Following), Accountant (Pvt)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14680 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSMS, சித்த மருத்துவர்<br>எதிர்பார்ப்பு: படித்த பட்டதாரி பெண்<br>தொ.இ: B/14651 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>1 இல் சூரி செவ்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:Bsc in Agriculture, Teacher<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14687 |

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் உயரிய விருது இந்தியப் பிரதமர் மோடிக்கு

(மொஸ்கோ) ரஷ்யா சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ரஷ்யாவின் உயரிய சிவிலியன் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா-ரஷ்யா இடையிலான 22 ஆவது உச்சி மாநாட்டில் பங்கேற்க 2 நாள் அரசு முறைப் பயணமாக நரேந்திர மோடி ரஷ்யா சென்றுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது ரஷ்யா பயணத்தின் போது சிறப்பு மரியாதையை பெற்றதோடு ரஷ்யாவின் உயரிய சிவிலியன் விருதான 'The Order of Saint Andrew the Apostle' விருதையும் பெற்றுள்ளார்.

விருது வழங்கிய புடின் ரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை விரிவுபடுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் மோடியின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு மிக உயர்ந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அரசாங்கத்தால் தி ஆர்டர் ஆஃப் செயின்ட் ஆண்ட்ரூ தி அப்போஸ்தலர் விருது வழங்கப்படுவதை ஒரு கௌரவமாக கருதுவதாக மோடி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ரஷ்ய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்ததுடன் விருதை 140 கோடி இந்தியர்களுக்கு அர்ப்பணிப்பதாக சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளார்.

அத்துடன் இந்த பயணத்தின் போது புடினுடன் மோடி பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இந்த பேச்சுவார்த்தை பயனுள்ளதாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இந்திய பெருங்கடலில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(டில்லி) இந்தியப் பெருங்கடலில் தென்னாபிரிக்காவுக்கு தெற்கே சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்னாபிரிக்கா - கேப்டவுன் நகரத்தில் இருந்து 2,500 கி.மீ. தொலைவில் கடலின் ஆழத்தில் நேற்று இந்நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 6.7 ஆக பதிவாகியுள்ளது.

இந்தியாவில் ஆங்காங்கே சிறிய அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டு வருவது மக்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் மகாராஷ்டிர மாநிலம் ஹிங்கோலி பகுதியில் நேற்றுக் காலை 7.14 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 4.5 ஆக பதிவாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை. (நி-6)

# உத்தரப்பிரதேசத்தில் விபத்து 18 பேர் உயிரிழப்பு




(டில்லி) உத்தரப்பிரதேச மாநிலம் உன்னாவ் நகரில் பேருந்து விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் 19 பேர் காயமடைந்துள்ளதாகவும் விபத்தில் உயிரிழந்தவர்களில் மூன்று பெண்களும் ஒரு சிறு குழந்தையும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லக்னோ - ஆக்ரா நெடுஞ்சாலையில் பீகாரில் இருந்து டில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து பின்னால் வந்த லொரி மீது மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)

# 16 வகையான பூச்சியினங்களை உணவாக சாப்பிட அனுமதி



(சிங்கப்பூர்) பூச்சிகளை மனிதர்கள் உணவாக உட்கொள்ள சிங்கப்பூர் அரசு அனுமதி வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

வெட்டுக்கிளிகள், பட்டுப் புழுக்கள், புழுக்கள் உள்ளிட்ட 16 பூச்சியினங்களை மனிதர்கள் உட்கொள்வதற்கு சிங்கப்பூரில் உள்ள உணவுக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த உணவுகள் சீன மற்றும் இந்திய உணவுகள் உட்பட உலகளாவிய உணவுகளின் சர்வதேச புகழ் பெற்ற மனுவில் சேர்க்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பூச்சிகளில் பல்வேறு வகையான வெட்டுக்கிளிகள், புழுக்கள் மற்றும் பட்டுப் புழுக்கள் ஆகியவை அடங்கும். இந்த பூச்சிகள் கடல் உணவுகள், உப்பு கலந்த முட்டை, நண்டு போன்றவற்றில் சேர்க்கப்படும்.

30 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களே அதிக தைரியத்துடனும் ஆர்வத்துடனும் முன்வந்து இந்த வகை உணவுகளை வாங்கிச் சாப்பிடுவதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-6)

# மோடியுடன் செல்பி எடுத்து மகிழ்ந்த ஆஸ்திரியா பிரதமர் கார்ல் நெகம்மர்



(வியன்னா) ஆஸ்திரியா சென்றுள்ள பிரதமர் மோடியை வரவேற்ற அந்நாட்டு பிரதமர் கார்ல் நெகம்மர் "செல்பி" எடுத்து மகிழ்ந்தார்.

இரு நாள் பயணமாக ரஷ்யா, ஆஸ்திரியா சென்றுள்ள பிரதமர் மோடி ரஷ்யா சென்று அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து பேசினார்.

தொடர்ந்து ரஷ்ய பயணத்தை முடித்துவிட்டு ஆஸ்திரியா தலைநகர் வியன்னா சென்றடைந்தார்.

ஆஸ்திரியா சென்றுள்ள பிரதமர் மோடிக்கு அந்நாட்டு பிரதமர் கார்ல் நெகம்மர் உற்சாக வரவேற்பு அளித்தார்.

பின்னர் மோடியுடன் கார்ல் நெகம்மர் "செல்பி" எடுத்து மகிழ்ந்தார். இதனைத்தொடர்ந்து ஆஸ்திரியா ஜனாதிபதி அலைக்ஸாண்டர் வான் டிர் பெல்லனை சந்தித்து இரு தரப்பு பரஸ்பரம் ஒத்துழைப்பு குறித்து பேசினார். (நி-6)

(வோஷிங்டன்) அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் களமிறங்கியுள்ளார். அதே போல் குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் களமிறங்கியுள்ளார்.

இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் ஜோ பைடன், டொனால்ட் ட்ரம்ப் இடையேயான நேருக்கு நேர் விவாதம் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்றது. இந்த விவாதத்தின் போது ட்ரம்பின் குற்றச்சாட்டுகளுக்கு பைடன் சரிவர பதில் அளிக்கவில்லை. மேலும் ஜோ பைடனின் மோசமான பதில்களால் அவரது சொந்த கட்சியினரே அதிருப்தி அடைந்ததாக தகவல்கள் வெளியாகின.

அதோடு ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடனை மாற்றுவதற்கு அவரது கட்சியினர் திட்டமிட்டு வருவதாகவும் பேசப்பட்டு வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புறவை பயன்படுத்தி போரை நிறுத்துங்கள்!

## ரஷ்ய-உக்ரைன் போர் நிறுத்தம் குறித்து இந்தியாவை வலியுறுத்தும் அமெரிக்கா

**(வோஷிங்டன்)**

**ரஷ்யாவுடன் வைத்துள்ள நட்புறவை பயன்படுத்தி உக்ரைன் மீதான போரை உடனடியாக நிறுத்த அந்நாட்டிற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.**



இது குறித்து அமெரிக்க இந்துஸ்தானி செய்தி தொடர்பாளர் மார்க்ரெட் மேக்லியோட் அளித்த பேட்டியில் பிரதமர் மோடி ஏற்கனவே தெரிவித்து இருந்த "இது போருக்கான காலம் இல்லை" என்பதை எடுத்துரைத்தார்.


தொடர்ந்து பேசிய அவர், "இந்தியா உட்பட அனைத்து நட்பு நாடுகளும் உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போரை நிறுத்த அந்நாட்டுக்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்கா வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

ரஷ்யா உக்ரைனில் இருந்து வெளியேற வேண்டும். பிரதமர் மோடி ஏற்கனவே தெரிவித்ததை போல் இது போருக்கான காலக் கட்டம் இல்லை."

இந்தியா மற்றும் ரஷ்யா இடையே மிகவும் விசேடமான நட்புறவு உள்ளது. இந்த நட்புறவை பயன்படுத்தி ரஷ்யாவிடம் போரை நிறுத்த இந்தியா வலியுறுத்த வேண்டும். உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் ஐ.நா விதிகளை மீறும் செயல் என்று அவர் தெரிவித்தார். (நி-6)

# செங்கடல் பதற்றத்தால்

## குறைவடைந்த சுயஸ் கால்வாய் வருமானம்



(கெய்ரோ)

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சுயஸ் கால்வாய் போக்குவரத்து ரசீதுகள் 57.2 சதவீதம் குறைந்து 959.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை பதிவு செய்துள்ளதாக எகிப்து மத்திய வங்கி கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சுயஸ் கால்வாய் போக்குவரத்து ரசீதுகள் ஜூலை 2023 முதல் மார்ச் 2024 வரை 7.4 சதவிகிதம் குறைந்து 5.8 பில்லியன் டொலர்களைப் பதிவு செய்துள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் 6.2 பில்லியன் டொலர்களாக இருந்தது.

நிகர டோனேஜ் 15.6 சதவீதம் குறைந்து 944.9 மில்லியன் தொன்களை பதிவு செய்துள்ளது. மேலும் ஜூலை 2023 முதல் மார்ச் 2024 வரை போக்குவரத்து கப்பல்களின் எண்ணிக்கை 11.5 சதவீதம் குறைந்துள்ளது. எகிப்தின் நிதியாண்டு ஜூலை 1ஆம் திகதி தொடங்கி அடுத்த ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி முடிவடைகிறது.

செங்கடல் கடல் போக்குவரத்து இடையூறுகள் காரணமாக இந்த குறைவு முதன்மையாக உருவானது.


கடந்த ஒக்டோபரில் காசா மோதல் வெடித்ததில் இருந்து ஏமனின் ஹவுதி குழு இஸ்ரேலுடன் தொடர்பு கொண்ட செங்கடலில் உள்ள கப்பல்களை பலமுறை தாக்கியுள்ளது. இது வணிக கப்பல் நிறுவனங்கள் தங்கள் கப்பல் பாதைகளை திசை திருப்ப கட்டாயப்படுத்தியது.

ஏமன் தலைநகர் சனா மற்றும் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள பிற மாகாணங்களில் உள்ள ஹவுதி இராணுவ தளங்கள் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் ஜனவரி முதல் பிராந்தியத்தில் ஹவுதி தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் வகையில் பல வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

சுயஸ் கால்வாய் உலக வர்த்தகத்தில் 12 சதவீதத்தைக் கொண்டு செல்கிறது. இது எகிப்துக்கான வெளிநாட்டு நாணயத்தின் முக்கிய ஆதாரமாகும். (நி-6)

# ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் பைடன் நீடிப்பார் என நம்புகிறேன்

## டொனால்ட் ட்ரம்ப்





இது குறித்து விளக்கமளித்த ஜோ பைடன், விவாத நிகழ்ச்சிக்கு முன்பு பல்வேறு பயணங்களை மேற்கொண்டதால் சோர்வு காரணமாக தன்னால் சரிவர செயற்பட முடியவில்லை என்றும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான போட்டியில் ஜோ பைடன் நீடிப்பார் என நம்புவதாக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அவரிடம் இருக்கும் கர்வம் காரணமாக அவர் வெளியேற விரும்பமாட்டார்.

அவருடன் நடந்தது ஒரு விசித்திரமான விவாதம். ஏனெனில் அவர் அளித்த பதில்கள் எதுவும் அர்த்தமுள்ளதாக இல்லை. அவை பதில்கள் கூட இல்லை. அவரது பதில்கள் அர்த்தமோ, உணர்வோ இல்லாத வார்த்தைகளாக மட்டுமே இருந்தன" என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிக் கடவுச்சீட்டு; யாழைச் சேர்ந்தவர் கைது

(கொழும்பு)

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஒஸ்ரியாவின் வியன்னா நகரத்துக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு இந்தியாவிற்குச் சென்று பின்னர் அங்கிருந்து ஒஸ்ரியாவின் வியன்னா நகரத்துக்கு தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்து ளார்.

இதன்போது, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரின் கடவுச்சீட்டு போலியானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தரகர் ஒருவரிடம் 90 இலட்சம் ரூபாய் பணத்தை கொடுத்து, இந்த போலி கடவுச்சீட்டை தயாரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி-6)



கொக்குவில் சி.சி.த.க பாடசாலையில் குருளை சாரணர் குழு அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வியாழக்கிழமை அன்று பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களுக்கான சாரணர் சீருடையினை தயாரிப்பதற்கான அனுசரணையினை லைக்கா ஞானம் அறக்கட்டளையினர் வழங்கியிருந்தனர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 250-350 | 250 |
| உருளைக்கிழங்கு | 270 | 260 | 250 | 220 | 300 |
| பச்சைமிளகாய் | 320 | 250 | 350 | 200-300 | 400 |
| தக்காளி | 350 | 500 | 300 | 350 | 360 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 150 | 100-120 | 200 |
| கோவா | 300 | 350 | 300 | 350 | 320 |
| கரட் | 350 | 500 | 480 | 500 | 550 |
| பூசணி | 180 | 200 | 200 | 150 | 200 |
| புடோல் | 160 | 300 | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 160-220 | 280 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 400 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 230 | 200 |
| பாகற்காய் | 1000 | 800 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 180 | 250 | 200 | 250 | 350 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300 | 300-400 | 400 |
| லீக்ஸ் | 550 | 500 | 500 | 380 | 500 |
| பீற்றூட் | 600 | 480 | 550 | 500 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 500 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1000 | 500-800 | 800 |
| போஞ்சி | 700 | 650 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 800 | 800 | 1000 | 600-800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 70 | 60-120 | 90-130 |
| இராசவள்ளி | 350 | 450 | 450 | -- | 500 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 140 | 200 | 150 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 100 | 80 |

## இன்று ஒரு தகவல் 179



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# கைரேகை மருத்துவம்

ஒருவர் ஒரு லாட்டரி சீட்டு வாங்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதைனை வாங்குவதற்கு முன்னர் நம் அதிஷ்டம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வோம் என்று நினைத்தார். இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே நடந்தார். வழியிலே கைரேகை ஜோசியர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரிடம் கொண்டு போய் கையைக் காட்டினார். அதிஷ்டம் எப்படி இருக்கிறது என்று பார்த்து சொல்லுங்கள் என்றார். அவர் பார்த்தார். அதிஷ்டம் பிரமாதமாக இருக்கிறது. நீங்கள் மிகவும் உயர்ந்த இடத்திற்கு போகப்போகின்றீர்கள் என்றார். அதைக் கேட்டதும் இவருக்கு மிகவும் மகிழ்ச்சி. உற்சாகத்தோடு ஓடிப்போய் ஒரு லாட்டரி சீட்டு வாங்கிக்கொண்டு போனார்.

சிறிது நாட்கள் கழித்தது வழியிலே அவரைப் பார்த்தேன். என்ன சார்?பரிசு விழுந்ததா?அவர் சொன்னது பலித்ததா என்று கேட்டேன். பரிசு விழவில்லை ஆனால் அவர் சொன்னது பலித்து விட்டது என்றார். அது எப்படி என்றேன். பரிசு விழுந்துள்ளதா என பார்ப்பதற்காக பேப்பர் வாங்குவதற்கு மிகவும் அவசரமாக ஓடினேன். பரிசு விழவில்லை. அதற்கு பதிலாக நான் தான் தவறிப் போய் குளத்திலே விழுந்துவிட்டேன். எலும்பு முறிவு. இவ்வளவு நாள் மருத்துவமனையிலே தான் இருந்தேன். மருத்துவமனையிலே மேல்மாடியிலே இருந்தேன். அதைத் தான் அந்த ஆள் உயர்ந்த இடத்திற்கு போகப் போகின்றேன் என்று சொல்லியிருக்கின்றார் போல இருக்கிறது என்றார்.

கைரேகை அதிஷ்டத்தை கண்டுபிடிக்கின்றதோ இல்லையோ வயிற்றிலே வளர்கின்ற குழந்தை எப்படி என்பதை அது கண்டு பிடிக்கின்றது. அது தான் கைரேகை மருத்துவம். medical palmistry. ஒரு குழந்தை பிறக்க போவதற்கு முன்னாலே அதைப்பற்றிய சில ரகசியங்களை அதனுடைய அப்பா,அம்மா கைரேகையை வைத்து கண்டுபிடித்து விடுவார்களாம். மேற்கு ஜேர்மனியில் சில மருத்துவ ஆராய்சியாளர்கள் ஒரு கணனி புரோகிராமை உருவாக்கியிருக்கிறார்கள். அது என்ன செய்கின்றது என்றால் பெற்றோருடைய கைரேகையை அலசி ஆராய்ந்து குழந்தை பிறப்பதிலே ஏதாவது பிரச்சினை இருக்கின்றதா என்பதனை முன் கூட்டியே கண்டுபிடித்து சொல்லிவிடுகின்றது.

பொதுவாக உள்ள பத்து வகையான வம்சாவழிக் கோளாறுகளை இது மூலமாக கண்டு பிடித்துவிடலாம். mongolism என்பது ஒரு கோளாறு. இது ஒரு வகையான mental retardation மனவளர்ச்சி குன்றிப்போய்விடுவது சாதாரணமாக ஆயிரத்ததிலே ஒரு குழந்தை அப்படிப் பிறப்பது உண்டு. இப்படி உள்ள குழந்தைகள் உள்ளங்கையிலே பார்த்தால் அதிலே சில குறிப்பிட்ட சுழிகள் இருக்கும். இது விஞ்ஞானிகளுக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு விடயம். இப்போது என்ன செய்கின்றார்கள் என்றால் பெற்றோர் கைரேகையையும் பிள்ளைகள் கைரேகையையும் ஒப்பிட்டு பார்த்து அதிலே ஏதாவது சம்பந்தம் தெரியுதா என்று பார்க்கின்றார்கள். அப்படி பார்க்கின்ற போது சில விடயம் தெரியவருகின்றது.

1980இல் மரபியல் வல்லுநர்கள் ஒரு விடயத்தை கவனித்தார்கள். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுடைய பெற்றோர்களிலே ஒரு 12 தாய், ஒரு சில தந்தை இவர்கள் நல்ல உடல் நலத்துடன் இறந்தால் கூட பிள்ளைகளுக்கு இருக்கின்ற சில மேனி வேறுபாடுகள் இவர்களுக்கும் இருக்கும். மேற்கு ஜேர்மனியிலே இந்த ஆராய்ச்சியிலே இன்னும் ஒருபடி முன்னேறியிருக்கிறார்கள். கையிலே உள்ள கிட்டத்தட்ட 50 துல்லியமான அறிகுறிகளைப் பட்டியலிட்டிருக்கின்றார்கள். சிலது மிகவும் துல்லியம் வெறும் கண்களினாலே பார்க்க முடியாது. லென்ஸ் மூலமாகத் தான் பார்க்கமுடியும். ஆனால் கணனி மூலமாக அந்த hand print ஐ ஆயிரக்கணக்கான மற்ற hand print உடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். உடனே ஒரு முடிவுக்கு வந்துவிடலாம்.

mongolista மட்டுமில்லை பலவிதமான மரபியல் குறைபாடுகளை கண்டுபிடிக்கலாம். குழந்தை குள்ளமாக இருந்தால் கூட கண்டுபிடித்துவிடலாம். அதனாலே பிறக்கப் போகின்ற குழந்தையுடைய மனவளர்ச்சி , உடல்வளர்ச்சி சரியாக இருக்காது என்ற ரகசியம் அப்பா, அம்மா கைரேகையிலே இருக்கின்றது. அப்படி இருந்தால் முன்கூட்டியே பாதுகாப்பாக கருச்சிதைவு செய்து விடலாமே. அவலமான ஒரு உலக வாழ்க்கையை அநாவசியமாக ஓர் உயிருக்கு எதற்கு கொடுக்க வேண்டும்?

ஒரு அப்பா சொன்னர் மனவளர்ச்சி குன்றிப்போவது ஒரு பக்கம் இருந்தாலும் இந்த காலத்திலே குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி அளவுக்கு அதிகமாக இருக்கிறது .அது தான் பிரச்சினை என்றார். அது எப்படி என்றேன். அவர் தன்னுடைய பிள்ளையைப்பற்றி விபரமாகச் சொன்னர்.

அவன் கேட்டானாம். ஏன் அப்பா? அப்பா சொல்வதைத் தான் பிள்ளைகள் கேட்க வேண்டுமா? பிள்ளைகள் சொல்வதை அப்பாக்கள் கேட்கக்கூடாதா? என்றான். அப்படி இல்லை. பிள்ளைகளை விட அப்பாக்களுக்கு அறிவும், அனுபவமும் அதிகம் என்றார். அப்படியா? என்றான். ஆமாம் எனறார். சரி வானொலியைக் கண்டு பிடித்தது யார்? என்றான். மார்க்கோனி என்றார். அதை ஏன் அவர் அப்பா கண்டுபிடிக்கவில்லை என்றான் மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியின் இருமருங்கும் பற்றைக்காடு

# அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்திற்கு செல்லும் வீதியின் இருபுறமும் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.**

நெடுங்கேணியில் இருந்து பெரியகுளம் வழியாக ஒதிய மலை வரையான ஐந்து கிலோ மீற்றர் வரையான வீதி புனரமைக்கப்பட்ட நிலையில் வீதியின் இரு புறமும் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.

வீதியின் இரு புறமும் பற்றைகளை துப்பரவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது. இதே வேளை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒதியமலை கிராமத்திற்கான பேருந்து சேவைகள் இடம் பெறாததன் காரணமாக இக்கிராம மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (நி-6-33)

# கள்ளப்பாடு பகுதியில்

## மின்இணைப்புக்கள் திருட்டு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின்சார மின்மாற்றியில் காணப்பட்ட புவித்தொடுப்பு வயர் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கரை துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கள்ளப்பாடு வடக்கு கிராமத்திற்கான மின்சாரம் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் காலை 6.30 மணி வரை துண்டிக்கப்பட்டு காணப்பட்டது. இந் நிலையில் விரைந்து செயற்பட்ட மின்சார சபையினர் மீண்டும் மின் இணைப்பினைச் சீர்செய்து வழங்கியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலையத்தில் முல்லை மாவட்ட மின்சார சபையினரால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட மின்சார சபையின் மின் அத்தியட்சகர் மற்றும் மின்சாரசபை ஊழியர்கள் சென்று பார்வையிட்ட வேளை குறித்த பகுதியில் புவித்தொடுப்பு வயரை களவாட பயன்படுத்தப்பட்ட கத்தி இரண்டு மீட்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-299)

# கூலரில் கடத்தப்பட்ட


## 28 கிலோ கேரளக் கஞ்சா

## இருவர் பொலிஸாரால் கைது

(தருமபுரம்)

கூலர் ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட 28 கிலோ 750 கிராம் கேரள கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைவாக மன்னார் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கி




பயணித்த கூலர் ரக வாகனத்தை வவுனியா நகரப் பகுதியில் வைத்து வீதி சோதனையில் ஈடுபட்ட வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மன்னார் பேசாலை பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 27 வயதுடைய இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கேரளா கஞ்சா கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட கூலர் வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-316)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3165

**லோஜன்**

தங்கச்சி அழச்சிட்டாள் என்று
ஒரு நாள் பேசாமல் இருந்தேன்



என் கூடவே பேசாமல் இருக்கிறியா
என்று அதுக்கும் அடிக்கிறாள்
என்ன கொடுமை

**டிபிஷா**

2025 இல் ஆவது ஏதாவது ஏற்றம் இருக்குமா
பார்த்து சொல்லுங்கள் சாமி



இருக்கும் ஒரு வயது ஏறியிருக்கும்

**சர்வின்**

ஒரு தடவை உடைச்சிட்டால் மறுபடியும்
ஒட்ட வைக்க முடியாது மாமா
மனசையா மாப்பிள்ளை



முட்டை ஆபாயில் மாமா

**சுவன்யா**

பணம் சம்பாதிக்கிறது ஆன்ட்ரொய்ட்
போன்ல சாஜ் ஏறுற மாதிரி ரொம்ப
ஸ்லோவா இருக்கு



செலவு பண்ணுறது
சாஜ் இறங்குற மாதிரி
ரொம்ப ஸ்பீடா காலியாகிடுது

**நவீன்**




**பிரேமினி**

தொப்பை விழாமல் இருக்க
என்ன செய்யனும்



இரண்டு கையாலயும் விழாமல்
கெட்டியாப் பிடிக்கனும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 530





சோழ நாட்டுக்குப் பெரும் விபத்து நேர்ந்திருக்கிறதே! சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியான இளவரசரைக் கடல் கொண்டு விட்டதாகச் சொல்கிறார்களே? இளவரசரைக் காப்பாற்றி அருளும்படி குழகரிடம் முறையிட்டுக் கொள்வதற்காக வந்தேன்." என்றாள் நந்தினி.

"அப்படியெல்லாம் ஒன்றும் நேராது. தாயே! தாங்கள் கவலைப்பட வேண்டாம். நம் பொன்னியின் செல்வருக்குச் சமுத்திர ராஜனால் ஆபத்து ஒன்றும் நேராது!" என்றார் குருக்கள்.

"எதனால் அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள், பட்டரே?"

"இளவரசர் பிறந்த நட்சத்திரமும், லக்கினமும் அப்படி, அம்மா! உலகமாளப் பிறந்தவரைக் கடல் கொண்டு விடுமா? தாங்கள் வருத்தப்படாதீர்கள்! குழகரைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். அவசியம் இளவரசரைக் காப்பாற்றுவார்" என்றார் பட்டர்.

இவ்வாறு கூறிவிட்டு சுவாமிக்குத் தீபாராதனை செய்து, திருநீறும் கொடுத்தார். "அம்மணி! தாங்கள் இவ்வளவு மேலான நிலைமையில் இருப்பது குறித்து மிக்க சந்தோஷம்!" என்றார்.

"என்னை உங்களுக்கு முன்னமே தெரியுமா, பட்டரே?"

"தெரியும் ராணி! பழையாறையில் பார்த்திருக்கிறேன். வைகைக் கரைக்கோவிலிலும் பார்த்திருக்கிறேன். தங்கள் தமையன், திருமலை, இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்?"

"ஆழ்வார்களின் பிரபந்தங்களைப் பாடிக் கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருக்கிறான். அவனை நான் பார்த்து வெகு காலமாயிற்று."

"அவனுக்குக் கூட அதைப் பற்றிக் குறைதான், அம்மா! தாங்கள் பழுவூர் ராணியான பிறகு அவனைப் பார்க்க வேயில்லையென்று வருத்தப்பட்டான்."

"அதற்கென்ன செய்யலாம், ஐயா! நான் புகுந்த இடத்தில் எல்லாம் பரம சைவர்கள். அவனோ வீர வைஷ்ணவன். 'ஆழ்வார்க்கடியான்' என்று பட்டப் பெயர் வைத்துக் கொண்டு, சைவர்களோடு சண்டை போட்டுக்கொண்டு திரிகிறான். அவனை எப்படி நான் சேர்ப்பது? புகுந்த வீட்டாரின் மனங்கோணாமல் நான் நடந்து கொள்ள வேண்டாமா?"

"உண்மை தாயே, உண்மை! தங்கள் பதியின் மனங்கோணாமல் நடப்பது தான் முக்கியமானது. ஆழ்வார்க்கடியான் எப்படியாவது போகட்டும்!"

பட்டரிடம் விடைபெற்றுக்கொண்டு இருவரும் கிளம்பினார்கள்.

"தனியாகப் போகிறீர்களே? சற்றுப் பொறுத்தால் நானும் வந்துவிடுவேன்."

"வேண்டாம் ஐயா! எங்களுக்காக அவசரப்பட வேண்டாம். இந்தப் பெண்ணுக்கு இந்தப் பக்கமெல்லாம் நன்றாய்த் தெரிகிறது. அதோடு இன்றைக்குத் தான் கோடிக்கரை முழுதும் அமளிதுமளிப் படுகிறதே! பயம் ஒன்றுமில்லை. நாங்கள் போகிறோம்" என்றாள் நந்தினி.

இரு பெண்களும் ஆலயத்துக்கு வெளியில் வந்தார்கள். பட்டர் கண் பார்வையிலிருந்து மறைந்ததும், ராக்கம்மாள் நந்தியின் கையைப் பிடித்து ஆலயத்துக்குப் பின்புறமாக அழைத்துச் சென்றாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் தாழைப் புதர்கள் செறிந்த ஓடைக்கரையை அடைந்தார்கள். நட்சத்திர ஒளியின் உதவியைக் கொண்டு ஓடைக் கரையோடு நடந்தார்கள்.

**ஆறாம் அத்தியாயம்**
**பூங்குழலியின் திகில்**

தாழைப் புதரின் மறைவில் பூங்குழலி மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஆந்தைக் கூட்டம்

ஒரு காட்டில் சிரஞ்சீவி எனும் காகம் நெடு நாட்களாக ஆந்தைக் கூட்டத்தை அழிக்க வேண்டும் என்று நினைத்து ஒரு திட்டம் தீட்டியது. அத்திட்டத்தின் படி சிரஞ்சீவி என்ற காகம் ஒவ்வொரு நாளும் ஒரு சுள்ளி என, நாள்தோறும் ஒரு குகையின் வாயிலில் நிறைத்து கொண்டே வந்தது. சிரஞ்சீவியின் நடத்தையில் எந்தவித சந்தேகமும் யாருக்கும் ஏற்படவில்லை. பகற்பொழுதில் கண்பார்வையற்ற ஆந்தைக் கூட்டம் குகைக்குள் அடைந்து, தூங்கிக் கொண்டிருந்தது. இது தான் தக்க தருணம் என்று நினைத்த சிரஞ்சீவி அந்தக் குகையை விட்டு வெளியேறியது.



தன்னுடைய காக ராஜனைச் சந்தித்த சிரஞ்சீவி, ராஜா! உடனடியாக, எல்லாக் காகங்களையும் அழைத்து, அவர்களிடம் ஆளுக்கொரு எரியும் கொள்ளியைக் கொடுங்கள். ஆந்தையின் குகை வாசலில் நான் குவித்து வைத்துள்ள சுள்ளிக்குவியலில் வைத்து விடட்டும். உடனே, குகையின் வாசல் தீப்பற்றி எரியும். ஆந்தைக் கூட்டம் அனைத்தும் அந்தத் தீயில் வெந்து அழியும் என்றது சிரஞ்சீவி.

சிரஞ்சீவியின் திட்டப்படி, காகராஜா தன் காகக் கூட்டத்தை அழைத்துக்கொண்டு எரியும் கொள்ளியுடன் ஆந்தைக் குகையை அடைந்தது. அங்கு சிரஞ்சீவி குவித்து வைத்துள்ள சுள்ளிகளில் தீயை மூட்டியது. நெருப்பும் புகையும் குகைக்குள் மண்டியதில் ஆந்தைகள் அனைத்தும் அழிந்தன. ஆந்தைக் கூட்டம் அழிந்த பின்னர், காகராஜா தன்னுடைய பழைய ஆலமரத்தில் வழக்கம் போலத் தன்னுடைய அரசாட்சியை நடத்தி வந்தது. பின் காகராஜன் சிரஞ்சீவியை அரசவைக்கு அழைத்து, நீ எப்படி ஆந்தைக் கூட்டத்தை நம்பவைத்து ஏமாற்றினாய் என்று எங்களுக்கு விளக்கிக் கூறு என்று கேட்டது.

நெருப்பு தன் வலிமையால் காட்டையே அழிக்கவல்லது. மரங்கள் தன் வேர்களை நிலத்தில் ஊன்றி இருந்தாலும், மிருதுவான தன்மை கொண்ட தண்ணீரும் காற்றும் மரங்களை வேரோடுப் பிடுங்கிச் சாய்த்து விடுகின்றனவே அது போலத்தான் நானும் செய்தேன் என்றது சிரஞ்சீவி.

நீதி :

எதிரியை அழிக்க தகுந்த நேரம் வரும் வரை காத்திருந்து புத்தியால் அழிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நன்மை ஒரு வைத்தியன். ஆனால், தீமை சில சமயங்களில் அதைவிட நல்ல வைத்தியன்.
>
> – எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நேரில் சென்று பார்ப்பதற்கு எங்களிடம் எவருமில்லையா?

முன்பெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் பாடசாலைகள், திணைக்களங்கள், வைத்திய சாலைகள் என எல்லா அமைப்புக்களுக்கும் சென்று அவற்றை நேரில் பார்வையிடுவார்கள்.

இதற்கு மேலாக, மாகாண சபை நிர்வாக முறைமை வருவதற்கு முன்னதாக, சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகள் கொழும்பில் இருந்து இங்கு வருகை தந்து சம்பந்தப்பட்ட இடங்களை நேரில் அவதானிப்பர்.

ஆனால் இப்போது எவருக்கும் நேரமில்லை. சொந்த வேலை பார்ப்பதற்கே நேரம் போதாது என்றிருக்கும்போது, வேறு என்னதான் செய்ய முடியும்.

இதையும் கடந்து, ஒவ்வொரு நாளும் திணைக்களங்களில் நடக்கின்ற கூட்டம் சொல்லிமாளா.

ஆம், எங்கள் தமிழ்ப் பிரதேசங்கள் இத்துணை தூரம் கந்தறுந்து காவடி எடுப்பதற்கு மூலகாரணம் ஒவ்வொரு நாளும் நடக்கின்ற கூட்டம் என்றால் அது மிகையன்று.

உண்மை. பிரதேச செயலகங்களுக்குச் சென்றால், பிரதேச செயலர்கள் கூட்டத்துக்குப் போய்விட்டனர் என்பதுதான் பதில்.

இதுபோல எல்லாத் திணைக்கள அதிகாரிகளும் கூட்டம், கூட்டம் என்று சென்று விட்டால், தேவையின் பொருட்டு வருகின்ற பொது மக்களுக்குப் பதில் அளிப்பது யார்? என்ற கேள்வி எழும்.

அதிலும் உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினர் கையடக்கத் தொலைபேசிகளில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

இந்த நிலையில் அப்பாவிப் பொதுமக்கள் வீடு, அலுவலகம் என ஆற்றலைகின்றனர்.

எனவே வடக்கு மாகாண நிர்வாகம் அடிக்கடி கூட்டங்களை நடத்தாமல், மக்களுக்கு சேவையை வழங்கும் பொருட்டு திணைக்களத் தலைவர்களை அந்தந்த திணைக்களங்களில் குந்தியிருந்து பணியாற்றுவதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

இதற்கும் மேலாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட நாளை ஒதுக்கி அரச அமைப்புகளுக்குச் சென்று அவற்றின் இயங்கு நிலைபற்றி நேரில் அவதானிக்க வேண்டும்.

உண்மையில் எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏ–9 வீதியால் பயணிக்கும்போது, வாகனத்தை ஒரு கணம் நிறுத்தி சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சென்று அதன் நிலைமை எப்படி இருக்கின்றது என அவதானித்திருந்தால் – அங்குள்ள நோயாளர்களுடன் கதைத்திருந்தால் நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும்.

என்ன செய்வது இப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்கு செல்வதாக இருந்தாலும் அங்கு மாலை மரியாதை வேண்டியிருக்கிறது. தவிர நூற்றுக்கும் குறையாத பொது மக்கள் கூடியிருக்க வேண்டும். அல்லது ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் இப்படி மக்கள் கூடி இருக்கின்ற நிலைமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் அந்த இடம் ஏகுவர்.

ஆக, சாவகச்சேரி வைத்தியசாலையில் நீண்ட காலம் நிலவிய குறைபாடுகளை சுகாதாரத் திணைக்களம் மட்டுமல்ல – வட மாகாண நிர்வாகம் மட்டுமல்ல – தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கவனிக்கவில்லை என்பது தான் உண்மை.

**ஆகையால், இனியேனும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச வைத்தியசாலைகளுக்கு, திணைக்களங்களுக்கு நேரில் சென்று ஒரு கணம் பார்வையிட வேண்டும்.**

### தோட்டத்தொழிலாளர்களின்

## வேதனத்தை அதிகரிக்காத நிறுவனங்களுடன் ஒப்பந்தம் இரத்து

(கொழும்பு)

இயலுமை இருந்தும் தங்களது தோட்டத் தொழிலாளர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட வேதனத்தைச் செலுத்தாத பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுடன் அரசு செய்துள்ள காணிக் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்குரிய சட்டத்தை வகுப்பதற்கான செயன்முறையைத் துரிதப்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு செலுத்த வேண்டிய வேதனம் தொடர்பில் மதிப்பீடு செய்யுமாறு நிதியமைச்சின் செயலாளருக்கு அண்மையில் அமைச்சரவை ஆலோசனை வழங்கியிருந்தது.

அத்துடன், குறித்த வேதனத்தை செலுத்துவதற்கு ஒவ்வொரு பெருந்தோட்ட நிறுவனங்களிடமும் உள்ள இயலுமையை ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கும் அன்றைய தினம் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, குறித்த குழுவின் விதந்துரைக்கமைய, வேதனத்தை செலுத்தாத பெருந்தோட்ட நிறுவனங்களுடனான குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ம-7)

## நீர்வீழ்ச்சியிலிருந்து வீழ்ந்த பிரான்ஸ் யுவதி மரணம்

(கொழும்பு)

எல்லே, பல்லேவெல நீர்வீழ்ச்சிக்கு சென்ற பிரான்ஸ் யுவதி ஒருவர் கீழே தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

19 வயதுடைய யுவதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த யுவதி கடந்த 25 ஆம் திகதி தனது காதலனுடன் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் இவர்கள் இருவரும் மற்றுமொரு சுற்றுலா தம்பதியினருடன் இணைந்து எல்லே, பல்லேவெல நீர்வீழ்ச்சிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது இந்த யுவதி புகைப்படம் எடுப்பதற்காக நீர்வீழ்ச்சியின் கற்பாறைகளின் மேல் ஏறியுள்ள நிலையில் சுமார் 200 அடி கீழே தவறி விழுந்துள்ளார்.

இதனையடுத்து, இந்த யுவதி காயமடைந்த நிலையில் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்த யுவதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## வீட்டு வாடகைச் சட்டத்துக்கு பதிலாகப் புதிய சட்டம்

குத்தகைதாரர், வீட்டு வசதி சட்டத்தை திருத்தும் புதிய சட்டமூல முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதன்படி, 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டு வாடகைச் சட்டம் நீக்கப்பட்டு அதன் பின்னர் புதிய சட்டம் கொண்டு வரப்படும்.

குத்தகைதாரர் மற்றும் நில உரிமையாளரின் உரிமைகளை சமமாக பாதுகாக்கும் நோக்கத்தில் இந்த சட்ட மூலத்தை கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## மாணவர்களுக்குப் புதிதாக 500 பேருந்துச் சேவைகள்

### அமைச்சரவையும் அனுமதி

(கொழும்பு)

மாணவர்களுக்காக புதிதாக 500 பேருந்து சேவைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியிலிருந்து 202 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள பெற்றோர்கள் மற்றும் பாடசாலை மாணவர் சேவைக்காக அதிகளவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் சேவையை அதிகரிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிசு சரிய பேருந்து சேவையின் கீழ் தற்போது 1537 பேருந்து சேவைகள் இயங்கி வருகின்றன.

மேலும் சுமார் 100,000 பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனிடையே, 1990 சுவா சரியா ஆம்புலன்ஸ் சேவைக்கு 95 ஆம்புலன்ஸ்களை இலவச மானியமாக வழங்க ஆசிய வளர்ச்சி வங்கியும் இந்தியாவும் அனுமதியளித்துள்ளன. (ம-7)

## கட்டார் – கொழும்பு விமான சேவையை

### அதிகரிக்க நடவடிக்கை

கட்டாரின் டோஹாவில் இருந்து கொழும்புக்கான விமான சேவையை நேற்று முதல் அதிகரிக்க கட்டார் ஏர்வேஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, தினசரி விமான சேவைகள் 5 அல்லது 6 ஆக அதிகரிக்கப்படும் என குறித்த விமான நிறுவனம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கட்டார் ஏர்வேஸ் உலகளாவிய ரீதியில் சுமார் 170 விமான நிலையங்களுக்கு தமது சேவையை முன்னெடுக்கிறது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு அந்த நிறுவனம்வாராந்தம்42 விமான சேவைகளை முன்னெடுத்து வருகிறது. (ம-7)

## மின்சாரம் தாக்கியதில் இளம் தாய் உயிரிழப்பு

### புத்தளத்தில் சம்பவம்

(புத்தளம்)

புத்தளம் - மன்னார் வீதியின் 4 ஆம் கட்டை பகுதியில் வசித்து வந்த இளம் தாயொருவர் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

பாபு துஷ்யந்தினி (வயது 28) எனும் இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு மின்சார தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளம் தாய் நேற்று முன்தினம் இரவுச் சாப்பாட்டுக்காக ரைஸ் குக்கரில் சோறு சமைப்பதற்காக தயாரான போது திடீரென மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, குறித்த இளம் தாய் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம் மது ஹிசாம் மரண விசாரணைகளை முன்னெடுத்தார்.

அத்துடன், உயிரிழந்த இளம் தாயின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ரயிலில் பயணித்தவர் தவறி விழுந்து உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து புறப்பட்டு சென்ற ரயிலில் பயணித்த பயணி ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்த துயரச் சம்பவம் பெம்முல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு புறக் கோட்டையில் இருந்து பொல்கஹவெல நோக்கி பயணித்த ரயிலில் இந்த சம்பவம் பதிவாகி உள்ளது.

நாடாளவிய ரீதியில் ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக நேற்று காலையும் மாலையும் சில ரயில் சேவைகளே இடம்பெற்றன.

இந்தநிலையில், நேற்று மாலை வேளையில் ஏற்பட்ட சனநெரிசல் காரணமாகவே குறித்த நபர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் – ஒரு பார்வை

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

15

மேலும் அப்போதைய பிரதம மந்திரி ஷேக் ஹசீனா தலைமையிலான ஆளும் அவாமி லீக் கட்சி அரசியலமைப்பை திருத்த வேண்டும், 24 ஜனவரி 2014 அன்று முழு ஐந்தாண்டு பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் பாராளுமன்றத்தை கலைத்து, பின்னர் கட்சி சார்பற்ற இடைக்கால அரசாங்கத்திடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் அல்லது 90 நாட்களுக்கு தொழில்நுட்ப வல்லுநர்களால் நடத்தப்படும் ஒரு காப்பந்து அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

வங்காளதேசத்தின் காப்பந்து அரசாங்கத்தின் வேலை, பங்களாதேஷ் தேர்தல் ஆணையத்துடன் இணைந்து பணியாற்றுவது, ஜனவரி நடைபெற்ற பொதுத் தேர்தலை ஒழுங்கமைக்கவும், ஏற்பாடு செய்யவும் மற்றும் மேற்பார்வையிடவும், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு அதிகாரத்தை மாற்றவும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

பெரும்பாலான கோரிக்கைகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப்படாததால், அனைத்து எதிர்க்கட்சிகளும் 2014 ஆம் ஆண்டுத் தேர்தலை புறக்கணிக்க தீர்மானம் எடுத்தன. ஹசீனா எதிர்க்கட்சிகளை உள்ளடக்கியதாக அனைத்து கட்சி இடைக்கால தேர்தல் அமைச்சரவை அரசாங்கத்தை தேர்தல் வரை அறிவித்தார், ஆனால் இது ஜியாவால் நிராகரிக்கப்பட்டது.

அப்போது ஒன்பதாவது பாராளுமன்றத்தின் காலம் (ஆணை) 24 ஜனவரி 2014 அன்று முடிவடைவதால், பங்களாதேஷின் அரசியலமைப்பின் 123(2)(ய) விதியின்படி 26 ஒக்டோபர் 2013 மற்றும் 24 ஜனவரி 2014 இற்கு இடையில் அல்லது 90 நாட்களுக்குள் காலாவதியாகும் முன் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதனால் வங்காளதேச தேர்தல் ஆணையம், 25 நவம்பர் 2013 அன்று, 10 ஆவது பொதுத் தேர்தல் 5 ஜனவரி 2014 அன்று நடைபெறும் என்று அறிவித்தது.

பல மாத போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் மற்றும் முற்றுகைகளைத் தொடர்ந்து, பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் தலைமையிலான 18-கட்சி எதிர்க்கட்சிக் கூட்டணி, தேர்தலுக்கான நியாயமற்ற நிலைமைகளைக் காரணம் காட்டி தேர்தலைப் புறக்கணிப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

3 டிசம்பர் 2013 அன்று, முன்னாள் ஜனாதிபதி /ஹுசைன் முகமது எர்ஷாத் தலைமையிலான ஜாதியா கட்சியும் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்தது.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் BNP தலைவர் கலீதா ஜியாவைச் சந்தித்து, தேர்தலைப் புறக்கணிக்க வேண்டாம் என்றும் வேலைநிறுத்தங்கள் மற்றும் வேலைநிறுத்தங்களை நிறுத்துமாறும், அதற்குப் பதிலாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் கேட்டுக் கொண்டனர்.

ஒரு வீடியோ செய்தியில், BNP இன் மூத்த துணைத் தலைவர் தாரிக் ரஹ்மான், "தனிப்பட்ட நலனுக்காக அல்ல, நாட்டின் இருப்புக்காக ஜனவரி 5 தேர்தலை நாம் அனைவரும் தடுக்கவும் புறக்கணிக்கவும் வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறி தேர்தலைப் புறக்கணிக்க அழைப்பு விடுத்தார். இடைக்கால கட்சி சார்பற்ற நிர்வாகம் நாட்டை தேர்தல் காலத்தில் வழிநடத்தும் வகையில் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன.

ஜாதியா கட்சித் தலைவர் எச்.எம். எர்ஷாத் தேர்தலைப் புறக்கணிக்க முடிவு செய்ததைத் தொடர்ந்து 4 டிசம்பர் 2013 இரவு, பாதுகாப்புப் படையினர் அவரது வீட்டை முற்றுகையிட்டனர். அதைத் தொடர்ந்து அவர் தான் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டல் விடுத்தார்.

டிசம்பர் 13 அன்று, பாதுகாப்புப் படையினரால் அவரது பரிதாரா இல்லத்தில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இராணுவத் தளபதியின் கூற்றுப்படி, எர்ஷாத் தனது சொந்த வேண்டுகோளின் பேரில் அங்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஜியாவும் டிசம்பர் 29 முதல் அவரது குல்ஷன் இல்லத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

சட்டம் ஒழுங்கை பராமரிக்க தேர்தல் ஆணையத்தின் வேண்டுகோளின் பேரில் வங்கதேச இராணுவம் டிசெம்பர் 26 அன்று முதல் ஜனவரி 9, 2014 வரை நாட்டின் தெருக்கள் முழுவதும் நிறுத்தப்பட்டது.

டிசம்பர் 13 அன்று, ஜமாத்-இ-இஸ்லாமியின் அப்துல் குவாதர் மொல்லா, பங்களாதேஷ் சுதந்திரப் போருடன் தொடர்புடைய போர்க் குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்ட முதல் நபர் ஆனார். இரண்டு ஆளும் கட்சி செயற்பாட்டாளர்கள் கலாரோவாவில் வெட்டிக் கொல்லப்பட்டனர், அதே நேரத்தில் ஜமாத்-இ-இஸ்லாமியின் தொண்டர்கள் ரயில் நிலையங்களுக்குத் தீவைத்தும் சாலைகளை மறித்தும் தாக்குதல் நடத்தினர்.

நோகாலியில் காவல்துறையினருக்கும் ஜமாத்-இ-இஸ்லாமி ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் மற்றொரு நபர் இறந்தார், அதே நேரத்தில் கட்சியின் செயல்பாட்டாளர்கள் அவரைத் துரத்தியதில் ஒரு ஓட்டுநர் கொல்லப்பட்டார். எதிர்க்கட்சி கூட்டணி டிசம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது.

29 டிசம்பர் 2013 அன்று BNP தேர்தலுக்கு எதிராக, காவல்துறையின் தடையை மீறி, டாக்காவை நோக்கி "ஜனநாயகத்திற்கான அணிவகுப்பு"இற்கு அழைப்பு விடுத்தது. மேலும் ஜியா கூறினார்: "அரசாங்கம் எதேச்சதிகாரமானது மற்றும் சட்டவிரோதமானது. அது உடனடியாக பதவி விலக வேண்டும்" என்று.

டாக்காவின் மையப்பகுதியில் காவல்துறையினரால் ஒருவர் கொல்லப்பட்டார், ரயில் நிலையத்தில் ஒரு காவலர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். ஆளும் அவாமி லீக்கின் சில ஆதரவாளர்கள் பங்களாதேஷ் உச்ச நீதிமன்றத்திற்கு வெளியே எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்களுடன் மோதினர்.

அணிவகுப்புக்கு தலைமை தாங்குவதற்காக ஜியாவின் காரை புறப்பட விடாமல் பொலிஸார் தடுத்துள்ளதாக BNP குற்றம் சாட்டியது. ஆயிரக் கணக்கான பாதுகாப்புப் படையினர், முக்கியமாக பொலிஸார், எதிர்க் கட்சிச் செயற்பாட்டாளர்களை ஒன்று திரட்டுவதைத் தடுக்க இருந்தனர்.

சுப்ரீம் கோர்ட்டுக்கு வெளியே, போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் தண்ணீர் பீரங்கிகளில் இருந்து சூடான மற்றும் வண்ணமயமான தண்ணீரை வீசினர். ஷேக் ஹசீனா, எதிர்ப்பு தெரிவிக்கும் எதிர்க்கட்சிகளின் உரிமையுடன் உடன்பட்டபோதும் "நீங்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தை நடத்தலாம். ஆனால் உங்கள் இயக்கத்தால் மக்கள் கொல்லப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். கைபண்டாவில் எதிர்க்கட்சி ஆர்வலர்களால் ரயில் தடம் புரட்டப்பட்டதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

டிசம்பர் 30 அன்று, 18 கட்சிகள் கொண்ட எதிர்க்கட்சி கூட்டணி, திட்டமிடப்பட்ட தேர்தலை எதிர்க்கும் வகையில் 1 ஜனவரி 2014 முதல் நாடு முழுவதும் சாலைகள், ரயில்கள் மற்றும் நீர்வழிப் பாதைகளை இடைவிடாது முற்றுகையிடுவதாக அறிவித்தது. இதற்கு முதல் நாள் தேசிய ஆர்ப்பாட்டங்களை நடத்த தடை விதிக்கப்பட்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் "ஜனநாயகத்திற்கான அணிவகுப்பு" என்று அழைக்கப்பட்டது. எதிர்கட்சிகளால் ஜனவரி 4, 5 மற்றும் 6 திகதிகளில் பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஜனவரி 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில், எதிர்க்கட்சி ஆர்வலர்கள் வங்கதேசம் முழுவதும் சாத்தியமான வாக்குச் சாவடி மையங்களைத் தாக்கினர். லக்ஷ்மிபூர், ராஜ்ஷாஹி, பிரோஜ்பூர், சில்ஹெட், ஜெனைடா, நாடோர், சிராஜ்கஞ்ச் மற்றும் பிரமன்பரியா ஆகிய இடங்களில் 100 இற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளுக்கு தீ வைத்தனர்.

போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி ஆர்வலர்கள் 100 இற்கும மேற்பட்ட வாக்குப்பதிவு மையங்களை எரித்ததால், தேர்தல் நாள் வன் முறையில் குறைந்தது 18 பேர் உயிரிழந்தனர்.

அன்று மொத்தம் 21 பேர் இறந்தனர் மற்றும் சுமார் 400 வாக்குப்பதிவு மையங்கள் சீர்குலைந்தன. BNP மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமி செயற்பாட்டாளர்கள் தாக்குர்கான் சதர் உபாசிலாவின் கீழ் எட்டு கிராமங்களில் உள்ள அவர்களது அவாமி லீக் சகாக்கள் மற்றும் இந்துக்களைத் தாக்கினர், 15 பேர் காயமடைந்தனர் மற்றும் அவர்களது வீடுகள் மற்றும் கடைகள் சூறையாடப்பட்டன மேலும், ஒரு இந்து கோவில் மற்றும் அதனுள் இருந்த சிலைகளும் தாக்கப்பட்டன. ஜக்குவா, ஜார்தங்கா, பனியபாரா மற்றும் மொண்டோப்பாரா உள்ளிட்ட எட்டு கிராமங்களுக்கு தாக்குதல்கள் பரவின.

இந்த கிராமங்களில் இருந்து நூற்றுக்கணக்கான இந்துக்கள் மேலும் தாக்குதல்களுக்கு பயந்து வெளியேறினர். ஜனவரி 7 ஆம் திகதி, ராதா கோவிந்த் மந்திர் மற்றும் காளி மந்திர் ஆகிய இரண்டு இந்துக் கோயில்கள் பிஎன்பி கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களால் எரிக்கப்பட்டன. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழுக்கி...

புலோலி தெற்கு பெரியவளவு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த இராசம்மா சின்னத்தம்பி (வயது-82) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி அவர் மலசல கூடத்துக்கு சென்றபோது வழுக்கி விழுந்து மயக்கம் அடைந்த நிலையில் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மீண்டும் அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு நேற்று புதன்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## அத்தியாவசிய...

அதற்கமைய, பாசிப்பயறு 1 கிலோகிராம் 998 ரூபாயாகவும் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு 1 கிலோகிராம் 205 ரூபாயாகவும் சிவப்புச் சீனி 1 கிலோகிராம் 375 ரூபாயாகவும் மற்றும் வெள்ளை சீனி 1 கிலோகிராம் 263 ரூபாயாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கு அமைய இந்த விலைக் குறைப்பை மேற்கொண்டுள்ளது. (ம-7)

## சுகவீன...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், சம்பள உயர்வு தரம் 3 (I) இல் உள்ள ஆசிரியர்களுக்கு ரூ. 525 வழங்கப்படும். தரம் 2(I) இல் உள்ள ஆசிரியர்களுக்கு ரூ. 1,335 மற்றும் தரம் 1 இல் உள்ளவர்களுக்கு ரூ. 1,630. இந்தச் சம்பள உயர்வு அவர்களின் ஓய்வூதியத்தில் சேர்க்கப்படாது.

சுகவீன விடுப்புப் பிரசாரத்தின் போது பணியமர்த்தப்பட்ட அனைவருக்கும் அதே அதிகரிப்பு வழங்கப்படும் என்றும் கூறினார். (ம-7)

## 7 மனித...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணியின் மூன்றாம் கட்டத்தில் ஆறாம் நாள் அகழ்வில் அடையாளப்படுத்தப்பட்ட ஏழு மனித உடல் பாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணியின் மூன்றாம் கட்டத்தில் ஆறாம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த அகழ்வின்போது பார்வையாளராக நேற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகத்தின் மனித உரிமைகளுக்கான அதிகாரி லூடியானா செல்றினி அகிலன் இந்த அகழ்வுப் பணிகளை மேற்பார்வை செய்திருந்தார்.

இந்த அகழ்வுப் பணியின்போது நேற்று முன்தினமும் நேற்றுமாக 7 மனித உடல் பாகங்கள், சில மனித ஆடைகள் மற்றும் இராணுவத்தால் பாவிக்கப்படும் கம்பி மேலும் சில பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆடைகளில் பெண்களுக்குரிய உள் ஆடைகள் காணப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக ஆய்வுகள் இன்று நடைபெற இருக்கின்றது.

நேற்றைய அகழ்வுப் பணிகளை பேராசிரியர் சோமதேவா குழுவினர் மேற்கொண்டனர் அத்துடன் சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவா தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரும் இந்த ஆய்வுகளில் பங்கேற்றிருந்தனர். (ம-7,299)

## தமிழர்களுக்...

காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு பரந்துபட்ட ஆதரவு காணப்படுகின்ற நிலையில் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் அதற்கு ஆதரவை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பான கூட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள 150க்கும் மேற்பட்ட புலம்பெயர் அமைப்புகள் அமெரிக்கக் காங்கிரஸ் தீர்மானத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு தீர்வு காணக்கூடிய அதன் சாத்தியப்பாட்டையும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அந்த தீர்மானத்தை வரவேற்றுள்ளன.

இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மோசமடையும் தருணத்தில் இந்த தீர்மானம் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

நல்லிணக்கம் பற்றி இலங்கை அரசாங்கம் பேசுகின்ற போதிலும் தமிழர் இனப் படுகொலையின் 15 வருட நினைவேந்தல் நிகழ்வின்போது இடம்பெற்ற சம்பவங்கள் நேர்மையான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து அரசாங்கம் அரசியல் உறுதிப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளன என புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இராணுவ மயமாக்கல், நில அபகரிப்பு, சித்திரவதைகள், தடுத்துவைத்தல் உட்பட ஏனைய மனித உரிமை மீறல்களிற்கு எதிராக தமிழ் மக்கள் தொடர்ந்தும் போராடுகின்றனர் எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

## ஜனா...

குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் இன்று ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரால் கூட்டாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய இந்த ஒத்திவைப்பு விவாதம் நடத்தப்படவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல்பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று வாய்மூல விடைக்கான வினாக்களை தொடர்ந்து, காலை 10.30 முதல் மாலை 5.30 வரை விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைய 2024 செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 16 வரையான காலப்பகுதியினுள் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவது தொடர்பிலேயே இந்த விவாதம் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, அரசாங்கம் பல்வேறு சூழ்ச்சிகளின் ஊடாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஒரு வருடத்தினால் நீடிப்பதற்கு முயற்சியை மேற்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 வாரங்களுக்குள் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக உரிய காலப் பகுதியில், உரிய நாளில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு செய்தியொன்றை வழங்குவதற்காகவே இந்த விவாதம் கோரப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 5530
J 5 1 7 3 4 2
அத சம்பத
J 7 3 4 2
சீட்டிழுப்பு இலக்கம் 105

தன நிதானய
திகதி - 2024.07.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1560
A 10 58 61 76 A
Double Chance 31846

மெகா பவர்
திகதி 10/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1878
V 26 04 07 53 65
Double Chance 95762

லக்கி 7 VIP
திகதி 2024.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 356
L 1 1 8 3 4 4 L

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3772
சீட்டிழுப்பு திகதி 10.07.2024
B 13 27 47 59
B 56531

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 0839
சிம்மம் 18 19 37 44 சிம்மம்
72199 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
10.07.2024 வெற்றி வாரம் 238 வர்ணம் பச்சை
H 8 0 9 9 1 8
39032
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,337,172.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2504 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 10.07.2024 தினம் புதன்கிழமை
06 41 52 58 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,048,617.60
DLB

சனிதா
திகதி 2024.07.10 வெற்றி வாரம் 4665
02 36 44 56 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,712,150.80
ரூ.100,000/- 22033
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4216 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.07.10 தினம் புதன்கிழமை
29 40 43 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,220,588.40
323727
DLB


ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 27 03 05 09 21
1680
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 532,378,477.00
10.07.2024 புதன்கிழமை
DLB

ஜயோதா Jayoda
திகதி 2024.07.10 வெற்றி வாரம் 2041 வர்ணம் மஞ்சள்
02 07 50 59 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,309,696.00
DLB

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2330
சீட்டிழுப்பு திகதி : 2024.07.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.126,780,482.40
14 33 64 72 J
149011
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 23 - 10 - 1938

இறப்பு 09 - 07 - 2024

## தம்பிராஜா தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற உதவி நில அளவை அத்தியட்சகர்)

ஆலங்குளாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி, இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா தர்மலிங்கம் அவர்கள் 09.07.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - செல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் - கணேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சுந்தரவதனாவின் கணவரும் கோமதியின் தந்தையும் முகுந்தனின் மாமனாரும் வாமணன், யாதவன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, மகேஸ்வரி, தியாகராஜா, விமலாதேவி மற்றும் புஸ்பலீலாவதி, யோகராஜா, ஜெயதேவி ஆகியோரின் சகோதரனும் ஜெயசுந்தரம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற வெற்றிவேல் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.07.2024) நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல் : குடும்பத்தினர்
074 287 0147, 076 677 6754

(1435)


JV Language Centre
Station Road, Chavakachcheri

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

பதிவுத்திகதி 10 JULY 2024 தொடக்கம் 25 JULY 2024

IELTS Life Skills A1

Student Visa, Work Visa

London (UK), Canada and Australia

தொடர்பு கொள்ள: 0777 291 307 or 0773 743 404

(1415)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

பெண் உதவியாளர் தேவை

பருத்தித்துறை புலோலி மேற்குப்பகுதியில் வயதான பெண்மணிக்கு வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலைகளிலும் வீட்டு வேலைகளிலும் உதவ ஒரு பெண் உதவியாளர் தேவை. நேர்மையானவராகவும் வேலைகளை நேர்த்தியாகச் செய்யக்கூடியவராக இருப்பவர்கள் விரும்பத்தக்கது

(150)

தொடர்பு: 074 154 7811

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-771)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

வங்கி மீதி வசதி
(Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

(149)

074 17 37 684

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.

(C-771)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-771)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- ☞ A32 பிரதான வீதியில் இருந்து 2 வது காணி
- ☞ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ☞ நன்னீர் ஊற்றுச் சூழல்
- ☞ உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- ☞ ஒரு பரப்பின் விலை 5½இலட்சம்
- ☞ தரகர் தேவையில்லை
- ☞ பார்வையிடும் நேரம்
(காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1442)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

077 814 7389, 077 986 5457

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org